உ

சிவமயம்



பலகாடு காரைநகரைப் பிறப்பிடமாகவும் இல-337, உதயநகர் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் கனகலிங்கம் சுதர்சன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவுமலர்

2012.10.17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளும் நானும்

பிறப்பில் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்துபாரென இறைவன் பணித்தான்

படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப்பாரென இறைவன் பணித்தான்

அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்

அன்பெனப்படுவது என்னெனக் கேட்டேன்
அளித்துப்பாரென இறைவன் பணித்தான்

பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்

மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்

முதுமை என்பது யாதெனக் கேட்டேன்
முதிர்ந்து பாரென இறைவன் பணித்தான்

வறுமை என்பது என்னெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்

இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்

அனுபவித்தே தான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்
ஆண்டவன் சற்றே அருகில் நெருங்கி
அனுபவம் என்பதே நான் தான் என்றார்.

— கவிஞர் கண்ணதாசன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# கனகலிங்கம் சுதர்சன்

## அவர்களின்

## சிவபதப்பேறு குறித்த

## நினைவுமலர்

17.10.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பினிலே குளிப்பாட்டி பண்பினால்
பழக்குவித்து என்பினைப் பிழிந்தெம்மை
ஏற்றி வைத்த தெய்வமே வந்ததோ
ஒரு திங்கள்– நீர்
வானுலகம் சென்று இன்று நொந்தனம்
நாம் இங்கு உம் அழியாத நினைவோடு
வந்தனம் கோடி ஐயா! பாமாலையூடாக
கண்ணீர்ப் பூக்களுடன்
இந்நூல் மாலை உந்தனுக்கு
நாம் சமர்ப்பித்தோம்
ஏற்றிடுவாய் நினைவுடனே

இங்ஙனம்,
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவாக...!



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 24 | 17 |
| 03 | 09 |
| 1986 | 2012 |

## அமரர்-கனகலிங்கம் சுதர்சன்

### திதிவெண்பா

ஐப்பசி நந்தனத்தில் அமைந்த துதியில்
இப்புவி நீத்த இளஞ்சேரல் - நித்திய
நாயகன் நிலைத்த செயல்பல வாற்றி
காவியன் ஆனான் காண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் வணக்கம்

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானே
காதலால் கூப்புவர் தம்கை

## தேவாரம்

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறை ஓதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்து
என் உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடு நோய்கள் ஆனபலவும்
அதி குணம் நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப் பெருந்துறையுறை சிவனே
ஆரோடு நோகேனார்க் கெடுத்துரைக்கேன்
ஆண்ட நீ அருளிலையானால்
வார்கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக வென்றருள் புரிவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்பத எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம்பக்தர்கள்
வஞ்சகர் போய் அகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
பவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமை கோனடி
யோமுக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறி தந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே (ல்)
மறவாமை வேண்டு மின்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ யாடும் போதுன தடியின் கீழ் இருக்க வென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற் குமரேசா
கறையானைக்கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனகலிங்கம் சுதர்சன் அவர்களின் வாழ்க்கைத்தடம்

இந்து சமுத்திரத்தின் மத்தியிலே முத்தென விளங்கும் எம் ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்துள்ளது யாழ்ப்பாணம். சைவமும், தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணக்குடா நாட்டின் தீவகப்பகுதியினுள் ஈழத்துச்சிதம்பரத்தான் கோயில் கொண்டிருக்கும் காரைநகரிலே நீர்வள, நிலவளச் சிறப்புடைய பலகாடு என்னும் பகுதியில் கருங்காலி போசுட்டி முருகப்பெருமானை குலதெய்வமாகவும், வியாபாரத்தைக் குலத்தொழிலாகவும் கொண்டு சைவ ஆசாரங்களைக் கடைப்பிடித்தொழுகிய கந்தையா சுப்பிரமணியத்திற்கும் தாய்மாமன் மகளான தம்பையா சிவபாக்கியத்திற்கும் 2வது மகனாக கனகலிங்கம் பிறந்தார்.

கந்தையா சுப்பிரமணியத்திற்கு ஒன்றுவிட்ட சகோதரியும் தம்பையா சிவபாக்கியத்தின் மைத்துனியுமாகிய முருகேசு சவுந்தரத்திற்கும் கருங்காலி கதிர்காமசுவாமி கோயில் பூசகரும் தர்மகத்தாவுமாகிய அருணாசலம் தில்லையம்பலத்திற்கும் (செட்டியார்) 4வது மகளாக பிறந்த புவனேஸ்வரியை மணம்புரிந்து வாழ்ந்த இல்லற வாழ்வின் பயனாக சுதர்சன், சுஜீவன், சுதர்சினி, சுபாசினி, சுகந்தினி, சுஜீவினி ஆகிய நாமங்களைக் கொண்ட அறுவர் மக்கட் செல்வங்களாக கிடைக்கப் பெற்றனர்.

இவர்களுள் அமரர் சுதர்சன் அவர்கள் முதலாவது பிள்ளை. 1986ம் ஆண்டு பங்குனி மாதம் 24ம் திகதி பூரநட்சத்திரத்தில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தொடங்கி இடப்பெயர்வுகளால் கிளிநொச்சி மத்தியகல்லூரி, இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை என மாறி மாறிப்படித்தார்.

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரீட்சையிலும் (1996ம் ஆண்டு அக்கராயனில் இடம் பெயர்ந்து இருந்த வேளை) சித்தியடைந்தார். 9ம் ஆண்டு மாகாணசபைப் பரீட்சையிலும் சிறந்த பெறு பேறுகளைப் பெற்றார். க.பொ.த சாதாரணதரப் பரீட்சையிலும் ஒரே தடவையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது உயர் கல்வியை உயிரியல் பிரிவில் மத்தியகல்லூரியில் தொடங்கினார். அப்போது ஏற்பட்ட அசௌகரியங்களால் கல்வியை இடைநிறுத்தப்பார்த்தார். இருந்தும் வணிகப்பிரிவில் படிக்க வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் வாய்ப்புக்கிடைத்த போது உட்சாகமாகத் தொடர்ந்தார். பரீட்சை எடுக்கும் காலம் நெருங்கும் போது தந்தையார் காணாமல் போனதால் மனமுடைந்து கல்வியைக் கைவிட்டு கூலி வேலை செய்து தம்பியாருடன் குடும்பப்பாரத்தைச் சுமந்தார்.

திரும்பவும் தந்தையார் கிடைத்தபோது படிக்கமுடியாத சூழ்நிலையாகி விட்டது. தம்பியாரும் கல்வியை கைவிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட, மனமுடைந்த நிலையில் அலுவலகம் ஒன்றில் கணக்காளராகப் பதவி ஏற்றுக்கொண்டார். அப்பதவிக்குரிய சம்பளத்தை க.பொ.த உயர்தரப் பெறுபேறு இல்லாத காரணத்தால் முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லையென்ற வைராக்கியத்தால் குறுகிய காலத்தில் முயற்சித்து 2008ல் பரீட்சைக்குத் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப்பெற்று மாவட்டத்தில் 14வது நிலையில் முகாமைத்துவ பீடத்திற்கான தெரிவு நிலையை அடைந்தார்.

இவ்வேளை இடப்பெயர்வுகளினால் இடம்பெயர்ந்து, அலைந்து காயப்பட்டு காணாதோர் என்ற நிலைக்கு ஆளானார். I.C.R.C மூலம் ஓமந்தை புனர்வாழ்வு முகாமில் இருப்பதாக அறிந்து துடித்தபோது எமது ஊர்ப்பிள்ளையான கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்கள் தீவிர முயற்சி எடுத்து அரும்பாடுபட்டு இவரை மீட்டெடுத்து பல்கலைக்கழகம் அனுப்பிப் படிக்க ஆவன செய்தார். அனுமதிக்கான காலம் பின்தள்ளப்பட்டதால் அதனைக் கைவிட்டார்.

வெளிநாட்டுப் பயணத்திற்கான விசா பெற்று ஆயத்தமான போது அதிலும் பணத்தட்டுப்பாடு ஏற்பட அவ்வாய்ப்பையும் கைவிட்டார். இவ்வேளை அயலவரான திரு.மாணிக்கராஜா அவர்கள் தனது வாகனத்தைக் கொடுத்து உதவியதால் எல்லாவற்றையும் மறந்து தீவிரமாக முயற்சித்து அதன் மூலம் முன்னேறத்துடித்தார். வீட்டுத்தேவைகளை கவனித்தார். கட்டப்பட்டு குறையிலிருந்த வீட்டைக் கட்டிமுடிக்க அரும்பாடுபட்டார். இந்நேரம் எதிர்பாராத விதமாக மாகாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமைத்துவ சேவைப் போட்டிப் பரீட்சை ஒன்றில் தோற்றி சித்தியடைந்து நேர்முகத்தேர்வு மூலம் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையின் முகாமைத்துவ உதவியாளராக பதவி ஏற்றுக்கொண்டார்.

அன்றிலிருந்து கல்வி உலகில் சாதனை படைப்பேனென்று உறுதிபூண்டு முன்னேறத்துடித்தார். ஓடி ஓடி பட்டப்படிப்புக்களை படிக்க முயற்சித்தார். உதவி அரசாங்க அதிபராக வரும் அளவிற்கு படிப்பேனென்று இலட்சியம் கொண்டார். அவரின் திறமை கண்டு வியப்புற்றிருந்த வேளை எதிர்பாராத விதமாக காய்ச்சல் என்ற வடிவில் இவரை ஆக்கிரமித்த நோயால் சகல செயற்பாடுகளையும் சிறிது சிறிதாகக் குறைத்து ஒதுங்கத் தொடங்கினார்.

இவரின் இந்நிலை கண்டு "அமைதித் தென்றல்" உளவளத்துறை நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் திரு.யசோதரன் அவர்களிடம் கவலைப்பட்ட போது கிளிநொச்சி வைத்தியசாலை வைத்தியர் திரு.ஜெயராஜ் அவர்களிடம் அனுப்பி உதவினார். அவர்கள் இவருடன் கலந்துரையாடி மனோநிலையில் எதுவித பாதிப்பும் இல்லையென்று கூறி இரத்தத்தை பரிசோதனை செய்வித்தார். இரத்தத்தில் அணுக்களின் அளவு மிகக் குறைவாகக் காணப்பட்டதால் உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார்.

அங்கு பல வைத்தியப் பரிசோதனைகளைச் செய்து பார்த்த வைத்திய அதிகாரி பேரானந்தராஜா அவர்கள் கான்சர் பிரிவிற்கு அனுப்பி வைத்தார். அங்கு இவரை ஏற்றுக்கொண்ட வைத்திய அதிகாரி ஜெயக்குமாரன் அவர்கள் பல வைத்திய பரிசோதனைகளை செய்வித்துப் பார்த்த போதும் திருப்தியடையாது மாறகம வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார்.

அங்கு செய்த பரிசோதனைகள் மூலம் (AML) இரத்தப்புற்றுநோய் வகையென உறுதிப்படுத்தப்பட்டது. உடனடியாக அங்கிருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கே வரப்போவதாக வந்து வைத்திய அதிகாரி திரு.ஜெயக்குமாரனை தஞ்சமடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம்தான் முடிவு என்ற நிலையிலும் யாழ் போதனா வைத்தியசாலைப் புற்று நோய்ப் பிரிவு சேவை வழங்குநர்களினதும், கிளிநொச்சி வலயக்கல்வி உத்தியோகத்தர்களினதும், கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தினர்களினதும், இறைஆசி வேண்டிப் பிரார்த்திப்போரினதும், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரினதும் அன்பு, அரவணைப்பு, ஆறுதல் மொழிகளாலும் பராமரிப்புக்களாலும் தான் நோயாளி என்பதையே மறந்து இன்புற்றிருந்தார்.

இந்நோயை நிரந்தரமாகக் குணப்படுத்த பல இலட்ச ரூபாய்கள் செலவுசெய்ய வசதி இருக்குமானால் இந்தியா வேலூர் CMC மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கான வசதியிருக்கிறதென அறிந்து ஆதங்கப்பட்ட வேளை

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள் பெருமுயற்சி எடுத்து கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்கள் அனைவரிடமும் பணம் திரட்டி உதவ முன்வர தெல்லிப்பளை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தினர், U.N.D.P உத்தியோகத்தர் திருமதி தர்சினி, இலங்கைவங்கி கிளிநொச்சிகிளை உத்தியோகத்தர்கள், தேசிய சேமிப்பு வங்கி கி॥ரிநொச்சிக்கிளை உத்தியோகத்தர்கள், LOLC கிளிநொச்சிக்கிளை உத்தியோகத்தர்கள், வர்த்தகசங்கம், வாழ்வாதார முகாமைத்துவ உத்தியோகத்தர்கள், உதயநகர் கிழக்கு கிராம சேவையாளர், உதயநகர் கிழக்கு மாதர் / கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், திரு.ந.பரமசிவம் அதிபர், திரு. சண்முகலிங்கம் பரஞ்சோதி, திரு.ப.விக்னேஸ்வரன் (வடமாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச்செயலாளர்), உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள், என பலரும் உதவ முன்வந்தார்கள்.

இந்நிலை அறிந்த கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. முருகேசு சந்திரகுமார் அவர்களும், மாவட்ட அமைப்பாளர் திரு.தவநாதன் அவர்களும் கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி கார்த்திகேயன் அவர்களுடன் தொடர்புகொண்டு கலந்துரையாடி அவர் மூலம் யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரி ஜெயக்குமாரன் அவர்களுடன் இணைந்து செயற்பட்டனர். கனடாவில் வசிக்கும் திருமதி. ஐங்கரன் தர்சினி அவர்களும் வைத்திய அதிகாரி ஜெயக்குமாரனுடன் தொடர்புகொண்டு ஊக்கமளித்தார். LOLC கிளிநொச்சிக்கிளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதி முகாமையாளராக கடமையாற்றி தற்போது முல்லைத்தீவுக்கிளை முகாமையாளராகக் கடமையாற்றும் திரு.நாமல் அவர்களும் ஒருவர் இந்தியா போய்வருவதற்கான பயணச்சீட்டை பொறுப்பேற்று அனுப்பிவைத்தார்.

இவ்வாறு எல்லோராலும் ஆவலுடனும், ஆசியுடனும் நல்ல சுக பலத்துடன் பயணித்தவர் இந்தியா போய்ச் சேர்ந்ததும் கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டார்.

இந்தியா வேலூர் C.M.C மருத்துவமனைக்கு அனுமதி எடுக்கமுடியாமல் அங்குள்ள சங்கரி மருத்துவமனையில் தற்காலிகமாக சிகிச்சை பெற்று திண்டாடியபோது திரு.ந. பரமசிவம் அதிபர் அவர்கள் மதுரையிலிருந்த காரைநகர் வைத்தியர் திரு.சிவஞானம் கணநாதனுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்துதவினார்.

அனுமதி பெற்று C.M.C மருத்துவமனைக்குள் உள்நுழைந்த போது யாழ் போதனா வைத்தியசாலையில் அடைந்த திருப்தி அடைய முடியாத நிலையில் பணத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு வைத்திய சேவை வழங்கப்படுகிறதென்ற நிலை அறிந்து இவரின் மனம் பட்ட வேதனை சொல்லில் அடங்காது.

இந்தியாவில் அப்துல்லா நலன்புரி நிலையத்தில் இருக்கும் இலங்கையைச் சேர்ந்த அசோக்குமார் குடும்பமும் அவரைச் சேர்ந்தவர்களும், அங்கு சிகிச்சைக்காக வந்திருந்த அனைத்து இலங்கை குடும்பத்தினரும் இவரை நன்கு கவனித்து உதவினார்கள். குறிப்பாக இலங்கையைச் சேர்ந்த யாழ் போதனா வைத்தியசாலை டாக்டர் திரு. தவரூபன் குடும்பம் இறுதிவரை உதவினர். நீர்கொழும்பைச் சேர்ந்த கிஸாம் குடும்பம் தமது இரத்தத்தைக் கூட வழங்கி காப்பாற்றத் துடித்தனர். இந்தியாவைச் சேர்ந்த நடன ஆசிரியர், போல் அங்கிள் என்பவர்கள் இறுதிவரை துடியாய்த்துடித்து அருகில் நின்று உதவினார்கள்.

கனடா காரை கலாசார மன்றம் எமது வேண்டுகோளை ஏற்று தம் இணையத்தளம் மூலம் உலகளாவிய ரீதியில் வசிக்கும் காரைநகர் மக்களிடமிருந்து நிதி திரட்டித்தர முழுமனதுடன் முன்வந்து அயராது பாடுபட்டனர். கிடைத்த உதவிகளையும் உடனடியாக முதற்கட்டமாக அனுப்பி வைத்திய வசதியைப் பெற உதவினர். அதுபோல பிரான்சிலிருந்தும் உதவினார்கள். சுவிஸிலிருந்து தனிப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் காரைநகரைச் சேர்ந்த சுப்பிரமணியம் கதிர்காமநாதனுடன் இலண்டனிலிருந்து திருமதி. திருமகள் சிவலிங்கமும் நிதி அனுப்பி உதவினார்கள். கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அவர்களும் அவர்களது சகோதரன் சிறீகுகன் அவர்களதும் ஊக்குவிப்பினால் லங்காசிறி இணையத்தளம் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போது உலகில் பரந்து வாழும் அனைத்து இலங்கையரும் உதவ முன்வந்தார்கள்.

சிலர் உடனடியாக இந்திய மத்திய வங்கிக் கணக்கின் மூலமும், வெஸ்ரன் யூனியன் மூலமும், மணிக்கிராம் மூலமும் அனுப்பி வைத்தார்கள். தாங்கள், தங்களுக்குள்ளேயே அறிந்தும், அறியாதவர்களுக்கும் பரப்பி முன்வந்துதவ காத்திருந்தார்கள். தெய்வ ஆசிகளை வேண்டி பிரார்த்தனைகளைச் செய்தார்கள். குறிப்பாக திருச்சியைச் சேர்ந்த ஜான்சன் பாஸ்ரர் அவர்கள் உபவாசமிருந்து ஜெபித்தார். எல்லோரும் ஆறுதல் வார்த்தைகள் கூறினார்கள். கோடிக்கணக்கில் செலவானால் கூட திரட்டி உதவுவோம் என்று எல்லோரும் திரண்டு நின்ற போதும், ஆசிகள் கூறி பிரார்த்தனைகள் செய்த போதும், ஆறுதல்கள் கூறியபோதும் அவர் இலங்கைக்கு வரவேண்டுமென்று அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்.

தனக்கு உதவி செய்வோருக்கும், கடன் தந்து உதவியவர்களுக்குமாக அடிக்கடி கவலைப்படுவார். நாட்டின் போர்ச்சூழலின் போது காணாமல் போன தனது தம்பியாரை நினைத்து நினைத்து வருந்துவார். "தன்னை ஒருபோதும் அந்த வைத்தியசாலை குணப்படுத்தாது என்றும் தனக்காக செலவிடும் பணத்தை தனது தங்கைமாரின் கல்விக்காக செலவிட வைப்பிலிட்டு வையுங்கள் அல்லது யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை அளித்து வரும் டாக்டர். திரு ஜெயக்குமாரன் தெய்வத்திடம் கொடுத்து அங்கிருக்கும் நான்கு பேரையாவது காப்பாற்றச் சொல்லுங்கள்" என்று வேண்டிக்கொண்டே இருந்தார்.

தன் அங்கலாய்ப்புக்கள், இலட்சியங்கள், எதிர்பார்ப்புக்களென்று நாளாந்தம் பொறுப்பித்துக்கொண்டிருந்த எமது தெய்வம் எங்கள் எதிர்பார்ப்புக்களையெல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு இப்பூவுலகை விட்டு தனது 26வது அகவையில் 17.09.2012ம் திகதி திங்கட்கிழமை மதியம் 12.30 மணியளவில் துதியை திதியில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாதவன்

அமரத்துவமடைந்த சுதர்சன் அவர்களைப் பெற்றோர் கவனமாக வளர்த்து வந்தனர். அவன் கல்வியில் சிறப்படைந்து பல்கலைக் கழகத்திற்குத் தெரிவானான். எனினும் நாட்டுச் சூழல் அவனது அனுமதிக்கு குந்தகம் விளைவித்தது. ஆனாலும் தளர்ந்து போகாமல் மாகாண முகாமைத்துவ சேவைப் பரீட்சையில் சித்திபெற்றுக் கிளிநொச்சி கல்வி வலயத்தில் பணிபுரிந்தான்.

சில மாதங்களுக்கு முன்னர் நான் கிளிநொச்சியில் கல்வி வலயம் சென்றபோது பணிப்பாளர் தனது உத்தியோகத்தர் ஒருவர் கொடிய நோய்த் தாக்கத்திற்கு இளம்வயதில் பாதிக்கப்பட்டதாகக் கவலையுடன் கூறினார். சில நாட்களின் பின்னரே இவர் எமது அயலவர் எனத் தெரிந்துகொண்டேன்.

இவரை இந்நோயின் தாக்கத்திலிருந்து மீட்பதற்கு வைத்தியர் S. திரு.ஜெயக்குமரன் அவர்களின் ஆலோசனையின்படி தமது சக்திக்கப்பாற்பட்ட வகையில் பெற்றோர் இந்தியாவில் உயர் வைத்திய வசதிகளுக்கு உட்படுத்தினர். கனடா-காரை கலாசார மன்றம் தனது இணையத்தளத்தினூடாக இரவது துர்ப்பாக்கிய நிலையினை வெளிப்படுத்தியது. இக்கொடிய வியாதியிலிருந்து இவர் குணமடைய வேண்டுமென புலம்பெயர் உறவுகள் உட்பட அனைவரும் பிரார்த்தனையில் ஈடுபட்டு ஆறுதல் கூறினர்.

எனினும் வைத்தியர்களிடமிருந்து யமன் இவரது உயிரைப் பறித்து விட்டான். இத்துயரச் செய்தியை காரைநகர் இணையத் தளங்களும், கிளிநொச்சி கல்வி வலயமும் கண்ணீருடன் வெளிப்படுத்தின.

சுதர்சனின் ஆத்மா சாந்திபெற இறையருளைப் பிரார்த்திக்கின்றேன். இவரது பிரிவால் துயருறும் பெற்றோர், சகோதரர், உறவினர் நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை வடமாகாண கல்வி அமைச்சின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன். இப் பாரிய இழப்பினைத் தாங்கும் சக்தியை பெற்றோருக்கும் உறவினருக்கும் ஆண்டவன் அருளப் பிரார்த்திக்கின்றேன்.

*ப. விக்னேஸ்வரன்*
*பிரதிச் செயலாளர்,*
*வடமாகாண கல்வி அமைச்சு*
*யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எது நடக்கவுள்ளதோ அது நன்றாகவே நடக்கும்"

## தன்னலமற்ற பணியாளன்

திரு. க. சுதர்சன் அவர்கள் எங்கள் பணிமனையில் பணி செய்தது சில மாதங்கள் தான். ஆனால் அவர் பதித்த தடங்கள் பலகாலம் மாறாமல் இருக்கும். ஓர் அரச சேவையாளனுக்கான இலட்சணங்களையும், இலட்சியங்களையும் அவரிடம் கண்டேன். எப்பொறுப்பானாலும் துணிவுடன் கையேற்று உரிய காலத்தில் நிறைவு செய்யும்திறன் அவரிடம் காணப்பட்டது. தான் சார்ந்த துறையில் வேலைகள் மீதியாக விடும் பழக்கம் அவரிடம் இல்லை.

தன்னலமில்லாப் பொதுப்பணியாளனாகவும், ஊதியத்திற்காக வேலை என்று எண்ணாதவராகவும், மனிதாபிமானமிக்கவராகவும், தன்னம்பிக்கை கொண்டவராகவும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றை மதித்து நடந்த சுதர்சன் எங்களோடு இன்று இல்லை.

அவரது மறைவுச் செய்தி கேட்ட போது எனது மனம் என்ன செய்வது என்றறியாது ஸ்தம்பிதம் அடைந்தது. சில மணிநேரம் என்னைச் சுதாகரித்துக்கொள்ள முடியாமல் அவதிப்பட்டேன். இது இறைவன் செயல் என எண்ணி சற்று அமைதி கண்டேன்.

எழுதி எழுதிச் செல்லும் விதியின் கை ஓர் எழுத்தும் மாறாது எழுதிக் கொண்டே போகும் என்பது ஓர் உண்மை. சுதர்சனின் மறைவால் துயர்படும் பெற்றார், சகோதரர்களுக்கு எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சுதர்சன் என்ற புனித ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் பாதங்களில் பேரானந்தப் பெருவாழ்வு பெறும் என்ற நம்பிக்கையோடு அமைதி அடைகின்றேன்.

இறப்பெல்லாம் உடலுக்கே இனிய ஆன்மா
இறவாது எரியாது இதுதான் உண்மை
பறந்து விடும் ஆவியுடல் பாரில் வீழும்
படைத்த நாள் நியதியிது பதறலாமோ?

*"எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்"*

க. முருகவேல்.
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்.
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணியமானவன்

எட்டு மாதமாய்ப் பழகிய உறவு ஒன்றினை இழந்து தவிக்கும் போது, இருபத்தாறு வருடமாய் ஊடாடிய உறவினை எப்படி மறப்பீர்கள்? எப்படி ஆறுவீர்கள்? என்ற வலியுடன் இந்தக் குறிப்பினை எழுதுகின்றேன்.

இலட்சியங்களை நெஞ்சில் சுமந்தபடி அலுவலகப் பணியில் மூழ்கித் திளைக்கும் சுதர்சன் என் கண்ணுக்குள் நின்று சிரிப்பது போல் ஒரு பிரமை இன்னும் நிழலாடுகின்றது.

நேரமும் கடமையும் கண்ணாகி, எக்கணமும் கடமையில் மூழ்கியிருக்கும் சுதர்சனை அவதானித்து வந்துள்ளேன். தனது கடமைக்குப் பின்பே எல்லாமுமாகி வாழ்கின்ற இளைஞன் என்பது எனது கணிப்பு.

அலுவலக விடயமாக உரையாடும் பொழுதெல்லாம் ஒரு புன்சிரிப்புடன் இணக்கமாவதும், தனக்குப் பிடிக்காத விடயம் என்றால் கண்புருவத்தை ஒரு முறை சிமிட்டுவதன் மூலம் தனது இணக்கமின்மையை நாசூக்க வெளிப்படுத்தும் பாங்கினைப் பல முறை அவதானித்து, இவரின் உயர் பண்பினை போற்றி இருக்கின்றேன்.

தனது கனவு வாழ்வினை நிஜத்தினில் சந்திக்கும் காலகட்டத்தில், காலன் வேறுவிதமான கணக்கினை செய்துவிட்டான். முள்ளி வாய்க்காலை சந்தித்த மக்களுக்கு இதுவெல்லாம் சாமானியமான சம்பவமாகி விட்டபோதிலும், உற்றவர்க்கும், உறவினர்க்கும் தாங்கமுடியாத வலி என்பதில் வேறு கருத்தேது.இவரது விழுமியங்கள், நடத்தைகளை நாம் எமது வாழ்வில் கடைப்பிடிப்பதன் மூலம் இவரை எம்முடன் வாழவைப்போம்.

சுதர்சனின் பெற்றோர்கள், சகோதரர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எனது அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போம்.

*திரு. சி. தேவராஜா*
*பிரதிக் கல்விப்பணிப்பாளர்,*
*வலயக்கல்விப் பணிமனை,*
*கிளிநொச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகன்ற மனம் கொண்ட இளைஞன்

அமரர் கனகலிங்கம் சுதர்சன்
(முகாமைத்துவ உதவியாளர்)

அமரர் கனகலிங்கம் சுதர்சனுடன் பழகும் வாய்ப்பு நோய்வாய்ப்பட்ட காலத்தில் ஏற்பட்டது. தாயார் முன்பள்ளி ஆசிரியர் என்பதாலும் தந்தை அயலவர் என்பதினாலும் அறிமுகம் இலகுவாயிற்று.

சுதர்சனின் நோயை குணப்படுத்தி வாழ வைக்க எடுத்த முயற்சி மதி தோற்று விதிவென்ற கதையாயிற்று. பலரும் நிதியை அள்ளி இறைத்து சுகம் எதிர்பார்த்த நிலையில் ஏமாற்றமே ஏற்பட்டது.

ஆனால் அவரின் பண்புகள், சமூகப்பார்வை, எம்மைவிட்டுப் போகவில்லை. பரந்த சமூக நோக்கு, அடுத்தவர்க்கு உதவும் மனப்பாங்கு, கீழ்ப்படிவு, கிரகித்தல்திறன் என்பவற்றை குறிப்பிடலாம்.

எல்லாம் இறைவன் செயல் என நினைத்து ஆறுதல் அடைவோமாக. அவனின் பண்புகளில் ஒன்றையாவது கருத்தில் கொள்வது பயனுடையதாகும்.

அன்னாரின் ஆத்மா நித்தியானந்தப் பெருவாழ்வுக்குள் இணைக்கப்பட்டு ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல ஈழத்து சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை இறைஞ்சுவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி! !!!

***ந. பரமசிவம் S.L.GAS***
***(ஓய்வு பெற்ற அதிபர்)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எந்த வேலையை கொடுத்தாலும் மறுக்காமல் ஏற்கும் பண்பு அவனது தனியழகு

01.05.2012 அன்று உடல் சோர்வாக இருப்பதால் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு செல்வதற்காக லீவு அறிவித்து விட்டுச் சென்றான். அவனை பரிசோதித்த டாக்டர் இரத்தத்தில் ஏதோ கோளாறு இருப்பதைக் கண்டு உடன் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார். யாழ் போதனா வைத்தியசாலைக்குச் சென்று ஓரிரு நாட்களில் எம் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையில் சுதர்சன் இரத்தப் புற்று நோயில் பீடிக்கப்பட்டுள்ள செய்தி அறிந்தோம். இதை அறிந்த வலய உத்தியோகத்தர்கள் அனைவரும் துவண்டனர்.

உடனே வலயக்கல்விப் பணிப்பாளர் அனைத்து உத்தியோகத்தர்களையும் வைத்தியசாலை சென்று சுதர்சனைப் பார்க்க ஒழுங்குகள் செய்து கொடுத்தார். எமது வலயக்கல்விப் பணிப்பாளர் கிருஸ்ணரை வணங்குபவர். அவர் சுதர்சனையும் வட்டக்கச்சி கிருஸ்ணன் கோவிலில் கண்டிருக்கின்றார். வைத்தியசாலையில் வைத்தே அவரது சுகத்திற்காக கிருஸ்ணரை வேண்டியதுடன் கிருஸ்ணருக்கு அர்ச்சனைகளும் செய்வித்தார். அவ்வளவிற்கு சுதர்சன் தன்னோடு கூடியவர்களை தன் பக்கம் ஈர்க்கும் அன்பும் பண்பும் கொண்டவர்.

இந்தியாவிற்கு கொண்டு சென்று சுதர்சனின் நோயைக் குணமாக்குவதற்காக வலயக்கல்வி உத்தியோகத்தர்கள் மட்டுமல்ல பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள் அனைவருமே தம்மால் இயன்ற உதவியை வழங்கினார்கள். ஆனால் சிகிச்சை பயனளிக்காமல் 17.09.2012 திகதியன்று எம்மை விட்டுப் பிரிந்தார்.

*வலயக்கல்வி அலுவலகம்*
*கிளிநொச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளத்தில் இடம் பிடித்த உத்தமன்........

அமைதியும் பொறுமையும்
கடமையுணர்வும் கண்ணியமும் மிகுந்த
ஓர் இளம் பணியாளனாக, எங்கள் வலயக்கல்விப்
பணிமனைக்குழாமில் சுதர்சனைக் கண்டேன்
சில நாளில் பளைக் கோட்டத்திற்கு நிர்வாகப்
பணியாளனாக நியமிக்கப்பட்டார்
தொடர்ந்து அவருடன் நெருங்கிப்பழகும்
வாய்ப்புக் கிடைத்தது. இன்னும் கூறப் போனால்
அயல் வீட்டு உறுப்பினர் என்றதாலும் உறவு
மேலும் அதிகரித்தது.
செய்ய வேண்டிய வேலைகளை உடனுக்குடன்
நிறைவு செய்யும் தொழிற்பற்றும், சமூக
விசுவாசமும் அவரிடம் குடிகொண்டிருந்தது.
"இங்கு இவரை நான் பெறவே என்ன தவம் செய்து விட்டேன்"
என்று எண்ணியதுண்டு.
திடீரென அவரின் செயலூக்கம் குறைந்து
போனதை உணர்ந்தேன். கொடிய வருத்தம்
பீடித்த செய்தி உள்ளத்தை
வாட்டியது. அவர் குணம் அடைந்து
மீண்டும் எனது கோட்டத்திற்கு
சேவை செய்வாரென நம்பினேன். நம்பிக்கை
வீண் போனது இது விதியென
எண்ணி ஆறுதல் அடைந்தேன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**திரு. சு. ஆனந்தசிவம்.**
**கோட்டக்கல்வி அதிகாரி,**
**பளைக் கோட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிர்வாக கிளையில் சுதர்சனின் நினைவுகள்..........!**

அன்று 05. 09. 2011 திங்கட்கிழமை துடிப்பான இளைஞனாக வலயக்கல்வி அலுவலகம் வருகின்றான் சுதர்சன். நிர்வாக உத்தியோகத்தர் திரு. இ. தவராசா அவர்களைச் சந்திக்கின்றான். சேர் எனக்கு முகாமை உதவியாளராக இங்கு நியமனம் கிடைத்துள்ளது. ஆனால் நான் முன்னர் செய்து கொண்டிருந்த சுயவேலை குறையாக இருக்கின்றது. அவற்றை நிறைவு செய்து கடமையை ஏற்கலாமா? என்று கேட்டான்.

அவனது வார்த்தை, கடமையுணர்வு முதிர்ந்த நிர்வாக உத்தியோகத்தரை தட்டியெழுப்பியது. அவனை நிர்வாகப் பிரிவிலேயே கடமைக்கு அமர்த்த முடிவு செய்கின்றார். ஆனால் எம்மைப் போன்ற ஆழம் குறைந்தவர்களுக்கு அவனது செயல் புரியாததாக இருந்தது.

இந்த நிலையில் அவன் தான் செய்து குறையாக இருந்த வேலையை முடித்து 07.09.2011 அன்று அலுவலகத்தில் கடமையைப் பொறுப்பேற்றான். நிர்வாக உத்தியோகத்தர் நினைத்தபடி தனது பிரிவிற்கே வேலைக்கமர்த்துகின்றார்.

பளைக் கோட்ட ஆசிரியர்களின் கோவைகள் அவனது கடமையாக வழங்கப்பட்டது. அதனைச் செவ்வனே செய்தான். அதன்பின் பாடசாலைக் கல்விசாரா உத்தியோகத்தர் கோவை அவனுக்காக வழங்கப்பட்டது.

சுதர்சன் அடிக்கடி சொல்லுவார்

"கடவுள் தனக்கு எது தேவையோ அதை அந்தந்த நேரத்தில் தன்னை தட்டியெழுப்பித் தருவான் என்று" அவர் கூறியது போல அவனை கடவுளுக்கு தேவைப்பட்டது தட்டியெழுப்பிச் சென்றுவிட்டார். இதுவே நிதர்சனம். கடவுளிடம் சென்ற அவரது ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் கடவுளை பிரார்த்திக்கின்றோம்.

*திருமதி. தாட்சா புஸ்பாகரன்*
*முகாமை உதவியாளர்*
*வ. க. அ*
*கிளிநொச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி மறப்போம் தம்பியே.......!

எம் சின்ன இதயத்தில் எத்தனை காயங்கள்
எத்தனை கவலைகள் எத்தனை துன்பங்கள்
எப்படித் தாங்கிடுவோம் தம்பியே உன்பிரிவை

இறைவன் கொடுத்த அன்புக் கொடை நீரன்றோ
பொக்கிஷமாய் உன்னைப் பெற - என்னதவம்
செய்தனரோ உன் அருமைப் பெற்றோர்

துயர் துடைக்க யாருமின்றி துவண்டுபோன குடும்பத்தை
கரைசேர்க்கும் ஓடமாய் கடைசிவரை துணைவந்தாய்
அன்பாகப் பழகி அனைவரையும் ஆட்கொண்டு
எழுதுநர் பணியில் நீ உன்னை அர்ப்பணித்து
ஆற்றிய தொண்டுகள் எத்தனை எத்தனை
இந்தியா சென்று நலமுடனே இங்கு வந்து
எம்முடன் கூடிக்குலாவுவாய் என்றிருக்க
காற்றலையில் வந்த செய்தி எம்மை
கதிகலங்க வைத்ததையா

வற்றியதோர் ஜீவநதி காய்ந்ததோர் கங்கைநதி
அணைந்ததோர் ஒளிவிளக்கு இருண்டதோர் வெள்விடியல்
எம் கண்களை குளமாக்கி இதயத்தை ரணமாக்கி
இறைவனடி நீ சேர்ந்தாய் தவிக்கின்றோம் நாமிங்கு

உயிர் பிரியும் நேரத்தை விட ..........................
உறவுகள் பிரியும் நேரமே மிகக் கொடுமையானது
உடல்களை ஒடித்து உணர்வுகளை உருக்குலைத்து
உணர்வற்று நிற்கின்றோம் தம்பி உன் நினைவுதனில்
தாங்க முடியவில்லை தம்பி உன் பிரிவு தனை
நாட்கள் முப்பது என்ன முந்நூறு ஆனாலும்
எப்படி மறப்போம் தம்பியே உன்னை...............!

"நிலவுக்குத் தடைபோட முடியுமானால்..................
நீள் கடலுக்கு கரைபோட முடியுமானால்........................
எம் சுதர்சன் பிரிவையும் ஜீரணிக்க முடியும்"

நிர்வாகக்கிளை அக்காக்கள்
ஜெயா, விஜி, கவிதா, மனோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயநகர் கிழக்கில் உதித்த தாரகை எங்கே..............................?

அமரர் கனகலிங்கம் சுதர்சனின் மரணச் செய்தி கேட்டு நெஞ்சம் இடிந்து மனமொடுங்கிப் போனேன் அன்று. இன்றும் அவன் நினைவு மனதைவிட்டு அகல மறுக்கின்றது. முத்தாக வந்து மண்ணில் வித்தாகிப் போனாய். கல்வியில் சிறந்தவனாய் நற்பணிக்கே பிறந்தவனாய் நாட்டிற்கும் வீட்டிற்கும் உழைத்து நல்வழி சென்றவனை பொல்லா நோயால் போர்த்து காலன் கவர்ந்தானோ. பல்லாயிரமாயிரமாய் பல நண்பர்கள், அன்பர்கள் உதவி கொண்டும், உன் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

இன்று ஊரே உன் பிரிவால் துடிக்கின்றது. உன் கல்வித் தேர்ச்சிகளையும் ஆற்றிய பணியையும் எண்ணிப் பெருமை கொண்டோம். இப்படி நடக்கும் என்று யார் நினைத்தது. யாருக்கு யார் ஆறுதல் சொல்வது. உன்பிரிவால் துயருறும் உன் குடும்பத்திலும் ஊர்மக்களிலும் ஒருவனாய் நின்று ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*மு. சிவஞானசுந்தரமூர்த்தி.*
*கிராம அலுவலர்,*
*உதயநகர் கிழக்கு மக்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்பின் பயணத்தில்.....................இறைவனின் முடிவு

இருள் நிலத்தின் நிஜத்தைத் தனதாக்கிக் கொண்டிருந்தது. இரவின் நிசப்தத்தை வெடியோசை தன் ஆளுகைக்குள் முற்றாகக் கொண்டுவந்திருந்தது. உணவிற்கான நேரம் நெருங்கியது. சொந்தவீட்டில் தனிக்கோப்பையில் உணவுண்ணும் நிலையிலில்லை. ஒருசொப்பின் பைக்குள்ளேதான் மூவரின் பசி அடங்கியிருந்தது. எங்கிருந்தோ வந்த இரு நண்பர்களுடன் அன்றைய உணவுக்குத் தயாரானேன். உணவுக்காக ஒன்றும் அறைக்குள் தயாராகவில்லை, உடலை வருடும் மார்கழி மாதக்காற்றில் வெறும் புற்றரையிலேயே உணவுப்பை அவிழ்கப்பட்டது. ஒருநிலாச்சோறு என்றே கூறிவிடலாம். உணவு உண்ண இருந்த மூவரில் அன்று உண்மையிலேயே என்னை மட்டுமே எனக்குத் தெரியும். எனது தோற்றத்துடன் ஒப்பிடும்போது மற்ற இருவரினதும் தோற்றம் நன்றாகவே இருந்தது. எனது தோற்றம் தான் எனக்கே அசிங்கமாக இருந்தது. பல்லுத் தீட்டி முகம் கழுவி குறைந்தது இரு கிழமைகள் கடந்து ஓடிக்கொண்டிருந்தது. அவர்கள் இருவரும் பையை அவிழ்த்தவுடன் உணவுப்பைக்குள் கைவைத்து விட்டார்கள். எனது தோற்றத்தால் நான் ஒதுங்கியே இருந்தேன். “பறவாயில்லை அண்ண கையைவச்சு சாப்பிடுங்க, இனி நாங்களும் உப்பிடித்தானே” என்ற நண்பனின் அரவணைப்பில் முடிந்த அன்றைய உணவுடன் ஏற்பட்ட உறவு அடுத்த நாள் மாலை வரைதான் நீடித்தது. பெயர் தெரியாமலே உறவுகள் கலைந்துபோனது. பின்பு நான் வேறு இடத்தில் நின்றதால் மீண்டும் அந்த உறவுகள் என் கண்ணில் பட்டதாக ஞாபகம் இல்லை.

பின்பு வாழ்வில் பலதுன்பதுயரங்கள், இழப்புக்களுடன் மூன்று ஆண்டுகள் கழிந்தது. 2010 இல் மீண்டும் வீடு திரும்பியபோது 2006 ஆம் ஆண்டு இழந்த பல்கலைக்கழக வாய்ப்பு மீண்டும் கிடைத்தது. அப்போது எனக்காக எனது சகோதரி விண்ணப்பித்த ஒரு முகாமைத்துவ உதவியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைக்குத் தோற்றியிருந்தேன். 2011 இல் பல்கலைக் கழகம் தொடங்கும் அதேசமயத்தில் கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்தில் வேலையும் கிடைத்தது. பல சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு வேலைக்கே செல்வதென்று முடிவெடுத்தேன். 02.09.2011 அன்று குறித்த அலுவலகத்திற்குச் சென்று எனது கடமையை பொறுப்பேற்றுக்கொண்டேன். ஓரிரு நாட்கள் கடந்த நிலையில் எமது நிருவாக உத்தியோகத்தராக கடமையாற்றிய திரு. தவராசா அவர்களுடன் எனது தனிப்பட்ட ரீதியிலான ஆலோசனையைப் பெறுவதற்காக உரையாடினேன். அப்போது அவர் சொன்னால் உம்மைப்போலவே பல இழப்புக்களைச் சந்தித்த ஒருவர் இன்னும் வர இருக்கின்றார். நல்ல துடிப்பான இளைஞன். இந்தக் கிளையில் ஒரு துடிப்பான இளைஞன் இருக்கவேண்டும் என்று விரும்புகின்றேன், அதனை வரப்போகும் இளைஞன் நிவர்த்தி செய்வான் என்ற கருத்துப்படவே பேசினார். எம் எல்லோரின் மனதிலும் இடம்பிடித்துள்ள நிர்வாக உத்தியோகத்தரின் மனதில் இடம்பிடித்துள்ள அந்த நபரினைப் பார்க்க எமக்கும் ஆவலாகத்தான் இருந்தது.

06.09.2011 அன்று நாம் எதிர்பார்த்த, நிர்வாக உத்தியோகத்தரின் நம்பிக்கைக்குரிய, எல்லாவற்றுக்கும் மேலாக எனது பெயர் தெரியாது கூடி நிலாச் சோறு உண்ட அந்த உறவினை மீண்டும் சந்தித்தேன். சந்தித்தும் அந்தச் சூழ்நிலையில் "என்னை தெரியுமா?" என்று நான் வினாவுவதற்கு இடமளிக்கவில்லை. ஆனால் அன்று எனது பழைய உறவின், கூடி உணவுண்ட உறவின் பெயரை தெரிந்துகொண்டேன். தனது பெயர் கனகலிங்கம் சுதர்சன் என்றார். இரண்டு, மூன்று நாட்கள் கடந்திருக்கும் என்று நினைக்கின்றேன். "கஜன்" ரீ குடிக்கப்போவோமா? என்று கேட்டார். போகும் போது நீர் தானே அந்த மன்னாரில் சந்தித்த ஆள் என்று கேட்டார். ஒரே பதில் "ஆம்" என்று சொன்னேன். அன்றிலிருந்து மீள ஆரம்பித்த உறவை இறைவன் இப்படி இடையில் நிறுத்திவைப்பான் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவிலும் எண்ணவில்லை. வேலையில் எமது உறவு சிறப்பாகவே நகர்ந்தது. நிறுத்திவிட்ட உயர் கல்வியைத் தொடர்வதற்கு முடிவெடுத்து ஒன்றாகவே உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பித்து ஒன்றாகவே கல்வியையும் தொடர்ந்தோம். வலயக் கல்வித் திணைக்களத்தில் ஏதாவது நிகழ்வு என்றால் தனது விசேட கைவண்ணத்தினைப் பயன்படுத்தி உதவிகள் புரிவார். வேலைகளை முன்னின்று செய்வார். காலமும் நகர்ந்தது.

2012 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் எனது ஊரிலுள்ள சில ஆசிரியர்கள், சிறுமாணவர்கள் சிலருடன் கண்டி, நுவரெலியா ஆகிய பிரதேசங்களினைப் பார்வையிடும் நோக்குடன் சுற்றுலா ஒன்றினை கூட்டாக ஒழுங்கு செய்தோம். சுதர்சனிடம் நீரும் வருகின்றீரா? என்றுகேட்டேன். மிகவும் சந்தோசமாகவும், ஆவலுடனும் சம்மதித்தார். ஒருநாள் மாலை 7.00 மணிக்கு ஆடல் பாடல்களுடன் கண்டியை நோக்கிய எமது பயணம் ஆரம்பித்தது. கூட்டிச்சென்ற மாணவர்களுடன் சுதர்சன் ஆடிப்பாடி சகயமாகப் பழகியதனால் எங்கள் உறவை விட மாணவர்களுக்கு சுதர்சன் மேல் மிகவும் அன்பு பற்றிக்கொண்டது. ஆனால் அதுதான் எனது நண்பனின் இறுதியான சந்தோசமான பயணம் என்று யாரும் நினைக்கவில்லை. நுவரெலியாவில் அம்பேபல என்னும் இடத்திலுள்ள 3675 அடி உயரமான மலையில் ஏறிவருமாறு ரொம்பவும் அடம்பிடித்தான். சரி என்று ஏறி இறங்கினோம். மீண்டும் வந்து மினிபஸ்ஸில் ஏறியது தொடக்கம் ஒரேசத்தி, மிகவும் உயர் வெப்பத்தில் காய்ச்சலும் காய்ந்தது. அன்று சந்தோசமாகப் பார்த்த எனது நண்பனின் முகத்தை மீண்டும் ஒருமுறை கூட அதே சந்தோசத்துடன் பார்க்க முடியவில்லை. இந்தியாவுக்குச் சிகிச்சைக்காகச் சென்றவன் திரும்பி எம்மைப் பார்க்க வருவான் என்று நிச்சயம் எதிர்பார்த்தேன். நான் மட்டுமல்ல எமது அலுவலகப் பணியாளர்கள், நண்பர்கள், உறவுகள் அனைவருமே நிச்சயமாக நம்பினார்கள்.

ஆனால் இறை தூதுவனே எனது நண்பனை, சகதோழனை, எமது அலுவலகத்தின் இளம் முத்தை தன்னுடன் அணைத்துக் கொண்டுவிட்டான். அவனின் உள்ளத்திற்கும், அன்பிற்கும் என்றும் அவன் இறைவன் அருகிலேயே இருப்பான்.

நண்பன்
ஜெ. கஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் உயிர்த் தோழா.........................

மனசெல்லாம் உன்னிடம் கொடுத்தேன்
என் உயிர்த் தோழா
பழசெல்லாம் நினைவுக்கு வருதே நேரில் வாடா
வான் என்று உன்னை நினைத்தேன்
வானவில்லாய் மறைந்தாயே
திருக்குறளாய் வந்து என் வாழ்வில்
இரு வரியாய் முடிந்தாயே
கண் மூடினால் இருள் ஏது நீயே தெரிகிறாய்
நான் பேசினால் மொழியாகத்தானே வருகிறாய்
எனக்காகப் பிறந்தாய் பின் ஏனோ பிரிந்தாய்
உயிராய் நீ இருந்தாய் கனவிலும் தெரிந்தாய்
நண்பா உன் பிரிவால் நடைபிணம் ஆகிறேன்
கரை மோதும் அலைகள் போல நினைவுகள் மோதிடுதே
ஊதுகின்ற சிகரெட் துண்டுகள் கதைகள் சொல்லிடுதே
தண்ணீரில் குமிழியைப் போல வந்துவிட்டுப் போனாயே
விளையாடும் மைதானங்கள் மயானம் ஆகிடுதே
இங்கு எனக்கென்று ஏதும் இல்லையே
என் பள்ளியே முற்றுப் புள்ளியே
இனி அழுவது முழுவதும் உன்னை நினைத்தே தோழா
நீ எங்கு போனாலும் உன் நினைவாய் அலைகிறேன்
என் நண்பனே உன் பிரிவால் தவிக்கிறேன்
ஒருமுறை வருவாயோ உன் திருமுகம் காண.........

நண்பன்,
குறளரசன்
பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**45 நிமிடங்களில் என் மனதில் இடம்பிடித்த உத்தமன்**

உண்மையிலேயே சுதர்சனுடைய முகம் எனக்குத் தெரியாது. அலைவழியாகவே நான் அவனுடன் உரையாடினேன். அவனுடைய குணத்தை உரையாடலின் உணர்வுகள் மூலம் தெரிந்து கொண்டேன். குறிப்பாகச் சொல்லப்போனால் எவ்விடயத்தையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல், சிறந்த ஒழுக்கம், குடும்ப பொறுப்பு, எவ்விடயத்தையும் இலகுவாகப் புரிந்துகொள்ளும் தன்மை, இக்குணங்களை 45 நிமிட தொலைபேசி உரையாடல் மூலம் புரிந்து கொண்டேன்.

நான் அவனுடன் உரையாடுவதற்காக அழைப்பை ஏற்படுத்தும் போது இவ்வளவு நீண்ட நேரம் கதைப்பேன் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவனுடைய பேச்சுத்திறனும், குடும்ப பொறுப்புணர்வும், அவனுடைய எதிர்பார்ப்புக்களும் தான் என்னையே மறந்து அதிகநேரம் பேசவைத்தது. தனது முடிவு மரணம் தான் என்று அறிந்தும் கூட சுதர்சன் தனக்காக வருந்தவில்லை. தனது பெற்றோரையும், காணாமல்போன தம்பியையும், சகோதரிகளின் எதிர்காலத்தைப் பற்றியுமே என்னிடம் கூறி வேதனைப்பட்டான். தன்னைத்தானே ஏமாற்றும் இக்காலத்தில் இப்படி ஒரு உன்னத பு ்ல்வனைப் பெற்றெடுக்க அவன் பெற்றோர் என்ன தவம் செய்தனரோ தெரியவில்லை.

நான் நிறைய மனிதர்களைச் சந்தித்திருக்கின்றேன் ஆனால் தனது மரணத்தை நினைத்து வேதனைப்படாது தனது குடும்பத்தைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்த மானிடனை முதல்முதலில் சுதர்சனில் தான் கண்டுகொண்டேன். உண்மையிலேயே சுதர்சனின் பிரிவு அவனுடைய குடும்பத்தினருக்கு மட்டுமல்ல, உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், அவனைத் தெரிந்தவர்கள், அவனுடன் பழகியவர்கள் என அனைவருக்குமே ஒரு பேரிழப்பாக அமைந்துவிட்டது.

சுதர்சனின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவனது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், மற்றும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி,

ஏ.சிவா,
சுவீடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகலிங்கம் சுதர்சனின்
# 31வது நினைவு நாளில்................

**கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் அனைவருக்கும் வாழ்த்துக்கள்**

எங்கள் அன்பு மகனும் சகோதரனுமான கனகலிங்கம் சுதர்சன் அவர்களின் 31வது நினைவு நாளில் அவரை கிறிஸ்து இயேசுவுக்குள் அனுசரிக்கின்றோம். அன்புத்தம்பி அவர்கள் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வந்த போது எனக்கு அறிமுகமானார். வியாதிக்குட்பட்டிருந்த அன்புச் சகோதரனுக்காக எங்களால் இயன்றளவு தேவ சமூகத்தில் மன்றாடினோம்.

கர்த்தருடைய பூரண சித்தத்தின்படி இந்தப்பூமியிலிருந்து வேதனை துன்பங்களை இனிமேலும் இம்மகன் அனுபவிக்கக் கூடாதென்று ஆண்டவர் தன்னுடைய பரலோகத்திற்கு எடுத்துக் கொண்டார்.

கிறிஸ்து இயேசுவுக்குள் மகன் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதற்காக மிகுந்த சந்தோசத்தோடும் தோத்திரத்தோடும் தேவனுக்கு நன்றி செலுத்துகின்றோம். மகனுடைய குடும்பத்திற்கு ஏற்ற சமாதானத்தை கர்த்தர் இக்குடும்பத்திற்கு தரும்படியாக இயேசுவின் சமூகத்தில் நான் பிரார்த்தனை செய்கின்றேன்.

நன்றி

இப்படிக்கு
கர்த்தரின் ஊழியர்
Eva. S. ஜோன்சன் லகாய் றோய்
அக்னி ஊழியம்
தமிழ் நாடு,
இந்தியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணன் என்று சொல்லவா..........?

நீண்ட நாள் ஆவலாய் இருந்தேன் உனைக்காண
நலமோடு இருந்த வேளை காண முடியவில்லை
நீ நலம் குன்றிய வேளைதானே
உனைக் கண்டேன்

சாந்தமான முகம்
அன்பான வார்த்தைகள்
அமைதியான பேச்சு
இவை எல்லாம் நீ அமைதியாவதற்காகவா?

அண்ணன் என்று சொல்லவா?
நண்பன் என்று சொல்லவா?
என்று சிந்தித்த வேளை
தெய்வம் என்று சொல்ல வேண்டியதாயிற்றே!

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

அன்பு நண்பன்
ம. தயாபரன்
பிரமந்தனாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீயின்றிய வானத்தில்
## எந்த நட்சத்திரங்களுமில்லை

நீ நடந்த முற்றத்தில் இன்று பூக்களில்லை
நீயின்றிய வானத்தில் எந்த நட்சத்திரங்களுமில்லை
நீயின்றிய வீட்டில் எங்களுக்கு மகிழ்ச்சியில்லை
நீயின்றிய நண்பர்களிடம் எந்த நம்பிக்கையுமில்லை

பாதைகள் பலதேடினாய் இளவயதினிலே
பாதியிலே பயணத்தை முடிக்கத்தானோ
சாதனைகள் பலவும் செய்ய விரும்பினாய்
சாவின் அழைப்பைத் தெரிந்ததாலோ
வேதனைகள் பலவும் ஏற்றுத்துடித்தாய்
வேளையோடு போகத்தான் எண்ணினாயோ

தாயென்று ஒருத்தி அழுகின்றாள்
தந்தையோ புலம்பித் தவிக்கின்றார்
தம்பி எங்கிருந்து ஏங்குகின்றானோ
தங்கைமார் துடித்துக் கதறுகின்றாரே

வாசம் வீசவில்லை எந்த மலரும்
வாழும் பிள்ளை நீயில்லை என்று
நேசம் தாளவில்லை எந்த நாளும்
நின்நினைவை இழக்கவில்லை எவரும்
பாசம் போகாதடா எங்கள் சுதனே
பைத்தியமானோமடா உன்னை இழந்தே
காலம் முழுதும் உன்னை நினைத்தே
வாழும் வாழ்க்கை ஏற்றோமே ஐயா!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புற்றுநோய் – ஓர் அறிமுகம்


### புற்றுநோய் என்றால் என்ன?

இது உடற்கலங்கள் உடலின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் தன்னிச்சையாக, அசாதாரண முறையில் பெருக்கமடைவதால் ஏற்படும் வளர்ச்சிகள் அல்லது கட்டிகள் எனக் கொள்ளலாம். புற்றுநோய் எமது உடலின் எப்பகுதியிலும் ஏற்படலாம்.

உலகளாவியரீதியில் புற்றுநோயால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதேபோல் இலங்கையிலும் இவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இலங்கையின் புள்ளிவிபரமானது படம் -1 இல் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளனது. புற்றுநோயாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பானது பெண்களில் கூடுதலாக உள்ளதையும் அவதானிக்கலாம்.



படம் 1


படம் 2

ஆண்களில் புற்றுநோயானது வாய் மற்றும் தொண்டைப்பகுதியில் அதிகூடிய அளவிலும், இரண்டாவதாக நுரையீரலில் அதிக அளவிலுமாக ஏற்படுகின்றது. (படம் -2) பெண்களில் மார்பகங்களிலேயே அதிக அளவில் புற்றுநோய் ஏற்படுகின்றது. இரண்டாவதாகக் கருப்பைக் கழுத்துப் பகுதியிலும், மூன்றாவதாக களப்பகுதியிலும் ஏற்படுகின்றது. இலங்கையில் ஒரு வருடத்தில் சுமார் 20,000 புதிய நோயாளிகள் இனம் காணப்படுகின்றனர். இவர்களில் கணிசமானோர் பிந்திய நிலைகளிலேயே சிகிச்சைக்காக வருகின்றனர்.

உலகளாவிய கணிப்பீடுகளின் அடிப்படையில் 2020ஆம் ஆண்டளவில் 10.3 மில்லியன் மக்களும் 2030ஆம் ஆண்டளவில் 12 மில்லியன் மக்களும் புற்று நோயால் மரணிப்பர் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்வு கூறப்படுகின்றது. இவ்வாறு மரணிப்பவர்களில் பெரும்பான்மையானோர் வளர்முக நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் எனவும் எதிர்வு கூறப்படுகின்றது.

புற்று நோயானது எமது பரம்பரை அலகுகள், சூழலில் ஏற்படும் மாற்றங்கள், உணவுப் பழக்க வழக்கங்கள் எனப் பல காரணிகளின் ஒட்டு மொத்தத் தாக்கங்களின் விளைவாகவே எமது உடலில் ஏற்படுகின்றது. இந்தத் தாக்கச் செயற்பாடுகள் என்ன என்பது தற்போது பெருமளவில் கல உள் அளவிலான ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இந்த அறிவின் வளர்ச்சி புற்றுநோய்க்கான நிர்ப்பீடன ஊசி (Vaccination) வழங்கல் மூலமாக புற்றுநோயை இல்லாதொழித்தல், புற்று நோயைக் குணமாக்கல் அல்லது அதன் அசௌகரியத்தைக் கட்டுப்படுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு வழிசமைத்துள்ளது.

**புற்று நோயால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான காரணங்கள் யாவை?**

**1. வயோதிபர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்.**

உலகளாவிய ரீதியில் வயோதிபர்களின் எண்ணிக்கை அதிகரித்தே வருகின்றது. உலக சனத்தொகைப் பரம்பல் மற்றும் ஆண், பெண்பாலாரிடையே அதிகரித்துவரும் வயோதிபர் எண்ணிக்கை என்பவற்றை காணலாம். வயோதிப காலத்தில், உடலின் கலங்கள் உடலின் கட்டுப்பாட்டுக்கு அமைவாக இல்லாது செயற்படுவதனால் அசாதாரண வளர்ச்சிகள் இலகுவாக ஏற்படுகின்றன. ஆண், பெண் பாலரிடையே புற்றுநோயின் தாக்கம் அதிக வயதானவர்களில் கூடுதலாக ஏற்படுவதினை தெளிவாக காணலாம்.

**2. தனி நபர் சார்ந்த பழக்க வழக்கங்களில் ஏற்படும் மாற்றங்கள்.**

✱ **புகையிலை பாவித்தல்:** இதனைப் புகைப்பதனாலோ, அருகிலிருந்து உள்வாங்குவதினாலோ, அல்லது இதனைப் பாக்கு, சுண்ணாம்புடன் உட்கொள்வதனாலோ புற்றுநோய், குறிப்பாக நுரையீரல், வாய், தொண்டை மற்றும் களப்பகுதியில் ஏற்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

✱ **மதுபானம் அருந்துதல்:** இதன் இரசாயன மற்றும் எரிவுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கத்தால் வாய், தொண்டை, களப்புற்றுநோய் ஏற்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளது. அத்துடன் இதனால் ஈரல் பாதிப்புற்று ஈற்றில் ஈரலில் புற்றுநோய் ஏற்படும்.

✱ பாக்கு, புகையிலை, சுண்ணாம்பு போன்றவற்றை வெற்றிலையுடன் உட்கொள்ளல். இவை வாய், தொண்டை, களப்புற்று நோய்களை அதிக அளவில் ஏற்படுத்தும்.

✱ வாய்ச் சுகாதாரமின்மை மற்றும் ஒழுங்கற்ற பற்களால் அல்லது சரியான அளவிற்செய்யப்படாத செயற்கைப் பற்களால் ஏற்படும் தொடர் உறுத்தல் என்பனவும் வாய்ப்புற்றுநோயை ஏற்படுத்தும்.

✱ மாறுபட்ட உணவுப்பழக்க வழங்கங்கள்: அதிக கொழுப்பு அடங்கிய உணவு, அதிகமாக உப்பிட்ட உணவு, பொரித்த, கருக்கிய உணவுகள், நிற மூட்டிய உணவுகள் மற்றும் உறைப்பான உணவுகள் என்பன பலவகையான புற்றுநோய்களை குறிப்பாக, மார்பகப் புற்றுநோய், குடற் புற்றுநோய் மற்றும் களப் புற்று நோயை ஏற்படுத்துகின்றன.

✱ போதைப்பொருள் பாவனை மற்றும் கட்டுப்பாடற்ற/ பாதுகாப்பற்ற பாலியல் பழக்கவழக்கங்கள் இவை குறிப்பாக வைரசுக்களால் ஏற்படும் புற்றுநோய்களை அதிகரிக்கின்றன. உதாரணமாக பாலுண்ணி வைரஸ் (Human Papilloma Virus) பெண்களில் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயை அதிக அளவில் ஏற்படுகின்றது. ஈரல் அழற்சி வைரஸ் (Hepatitis Virus B, C) மூலமாக ஈரல் புற்றுநோய் ஏற்படுகின்றது. எயிட்ஸ் நோயுடன் தொடர்பாகவும் புற்று நோய்கள், குறிப்பாகக் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய், குதப்புற்றுநோய் மற்றும் நிணநீர்க்கணுப் புற்றுநோய் என்பன ஏற்படுகின்றன.

3) சுற்றாடலில் ஏற்படும் மாற்றங்கள்

✱ நகரமயமாக்குதல் மற்றும் பல்வேறு வகைகளில் சூழல் மாசடைதல்.

✱ தொழிற்சாலைகள் உருவாக்கப்படலும், அதன் விளைவாக இரசாயன, பௌதீகக் கழிவுகள் சூழலில் கட்டுப்பாடுகள் கடந்து கலத்தல்.

✱ கட்டுப்பாடற்ற முறையில் விவசாயத்துக்காகப் பீடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லிகள், வளமாக்கிகளைப் பயன்படுத்தல். இதன்மூலம் சுவாசிக்கும் காற்று, குடிப்பதற்காகப் பயன்படுத்தும் நிலத்தடி நீர் மற்றும் உண்ணும் மரக்கறி வகைகள் என்பவற்றில் இரசாயனப் பதார்த்தங்கள் செறிந்து இருப்பதன் மூலம் எமது உடற் கலங்களைப் பாதிக்கின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயபீடத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் எமது பிரதேச நிலத்தடி நீரானது அதிகளவிலான நைத்திரேற்றுகள் கொண்டதாக உள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது. நாம் உட்கொள்ளும் மரக்கறிகளில் பீடைநாசினி மீதிகள் (Pesticide Residues) எந்த அளவில் செறிந்து உள்ளது என்று இன்னமும் ஆய்வுகள் மூலம் அறியப்படவில்லை. ஆனால், விவசாயிகள் பீடை நாசினிகளை, கடைசியாக விசிறியதில் இருந்து ஒரு சில நாட்களிலேயே விற்பனைக்காக அறுவடை செய்கின்றனர் என்பது கண்கூடு. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நாம் எமக்குத் தெரியாமலேயே உடலுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தும் இரசாயனங்களை உள்ளெடுத்து ஈற்றில் புற்றுநோயாளியாகும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றோம்.

* பெண்களில் மாதவிடாய் நின்ற பின்பு ஓமோன்களைப் பாவிப்பதால் மார்பகப் புற்றுநோய் அதிக அளவில் ஏற்படுகின்றது.

* சூரியனில் இருந்துவரும் அல்ரா வயலற் (UV) கதிர்கள் மூலமாகவும் ஓசோன் படல உடைவால் பூமியை அடையும் பாதகமான சூரியக்கதிர்கள் மூலமாகவும் தோல் சம்பந்தமான புற்றுநோய்கள் ஏற்படுகின்றன.

### 4) அணுக்கதிர்த்தாக்கம்

அணுக்கதிர்த்தாக்கம் புற்றுநோயை ஏற்படுத்தும் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. குறிப்பாக 1945களில் இடம்பெற்ற ஜப்பானிய அணுக்குண்டுத் தாக்குதலின்பின் அப்பிரதேசத்தில் உயிர் பிழைத்து வாழ்ந்த பலர், ஆண்டுகள் சிலகழிந்து புற்றுநோய்த் தாக்கத்துக்கு உள்ளாகினர். ஜப்பானின், கிரோசிமா (Hiroshima) மற்றும் நாகசாக்கியில் (Nagasaki) ஏற்பட்ட அணுத்தாக்கத்தினைப் பார்க்கும்போது அதன் வலுவான தாக்கத்தை ஊகிக்கலாம். இதேபோன்று 1986இல் சேணோபில் (Chernobyl) இல் நடைபெற்ற அணு உலை விபத்தின் பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல சிறுவர்கள் புற்றுநோயாக மாற்றமடைகின்ற தன்மையை உணர்த்தும். எனவே அவை புற்றுநோயாக மாற்றமுற்றுள்ளதா என்பதை வைத்திய பரிசோதனைமூலம் விரைவில் தெளிவு படுத்துதல் நல்லது.

**5) பெண்களில் யோனி வழியில் இருந்து அசாதாரணமாக இரத்தம் அல்லது வெள்ளைப்போக்கு ஏற்படுதல்.**

இவ்வாறான அறிகுறிகள் பெண்களில் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயிலும், கருப்பை உடற் புற்றுநோயிலும் தென்படும். பெண்கள் இவ்வாறான அறிகுறிகள் தென்படின் குறிப்பாக மாதவிடாய் நின்ற பின்பும் இரத்தப்போக்கு இருக்கும் இடத்து வைத்திய ஆலோசனை பெறவேண்டும்.

**6) மலசலம் கழிக்கும் பழக்கத்தில் ஏற்படும் வித்தியாசம் அல்லது மலத்தோடு இரத்தம் வெளியேறல்**

இவை சாதாரணமாக மூல சம்பந்தமான வருத்தத்திலும் ஏற்படலாம். ஆனால் இவை குடல், மலவாசல் போன்ற பகுதிகளில் ஏற்படும் புற்றுநோய் காரணமாகவும் ஏற்படலாம். எனவே, இந்த அறிகுறி ஏற்படின் உடன் வைத்தியரை நாடவும். சலம் அடிக்கடி போதல், ஆண்களில் சுக்கிலச் சுரப்பி (Prostate gland) இல் ஏற்படும். சாதாரண புற்றுநோய் அல்லாத வளர்ச்சி காரணமாகவோ அல்லது புற்றுநோய் வளர்ச்சி காரணமாகவோ ஏற்படலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் மருத்துவ ஆலோசனையை உடன் பெறுதல் நன்று.

**7) உணவு விழுங்குவதில் ஏற்படும் கஷ்டம் அல்லது அஜீரணம் (சமிபாடின்மை)**

இவை பெரும்பாலும் களம் மற்றும் இரப்பைப் புற்றுநோயின் அறிகுறிகளாக இருக்கும்.

**8) வாய்க்குழியில் காணப்படும் தடித்த வெள்ளை, சிவப்பு நிறமான அகற்ற முடியாத தழும்புகள்**

(Leukoplakia, Erythroplasia) இவை வாய்ப்புற்றுநோயின் முன்னிலைகளாகும். அவற்றுடன் வாய்ப்பகுதியில் இருக்கும் மாறாத புண்களும் புற்றுநோயின் அறிகுறிகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**9) காரணமற்ற நீண்டநாள் காய்ச்சல்.**

இவ்வாறான காய்ச்சல் பெரும்பாலும் குறைந்த வெப்பநிலை அளவிலேயே இருக்கும்.

**10. மாறாத மஞ்சட் காமாலை**

புற்றுநோய்க் கட்டியானது பித்தக்கானை அழுத்துவதனால் பித்த நீரோட்டம் தடைப்படல், ஈரலில் புற்றுநோய் உருவாகுதல் அல்லது வேறு இடத்தில் இருந்து புற்றுநோய் ஈரலுக்குப் பரவுதல் போன்ற சந்தர்ப்பங்களில் மஞ்சள் காமாலை உருவாகும்.

**11) இரத்தக் கசிவு**

இலகுவில் முரசிலிருந்து இரத்தம் கசிதல் அல்லது தோலின் கீழ் இரத்தக்கசிவு ஏற்படும் இடத்து உடன் வைத்திய ஆலோசனை பெற்று நீங்கள் இரத்தப்புற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ளீர்களா என்ற சந்தேகத்தை தீர்க்கவும்.

இவை தவிர புற்றுநோயின் பிந்திய நிலைகளிலும் பல அறிகுறிகள் ஏற்படும்.

உதாரணமாக:

- உடல் அதிக அளவில் மெலிவடைதல்
- பசியின்மை
- அதிக சோர்வடைந்திருத்தல் போன்றன.

இவ்வாறான அறிகுறிகள் புற்றுநோயின் தாக்கம் உடலின் பல பகுதிகளை அடையும் இடத்து புற்றுநோய் கலங்களினாலோ அல்லது உடல் கலங்களினாலோ சுரக்கப்படும் பல பதார்த்தங்களின் செயற்பாட்டினால் ஏற்படுகின்றது. இதுவரை உங்களுக்குக் கூறப்பட்ட பொதுவான புற்றுநோயை ஏற்படுத்தும் காரணிகளைத் தவிர்ப்பதன் மூலமும், அதற்கான ஆரம்ப அறிகுறிகள் காணப்படும் இடத்து வைத்தியரை நாடி ஆரம்பத்தில் புற்று நோயை இனம் காண்பதன் மூலமும் புற்றுநோயின் பிடியில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புற்றுநோயும் உணவுப் பழக்கவழக்கங்களும்.

**உணவு**

சில உணவானது புற்றுநோய்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கிறது. சில உணவுகள் புற்றுநோய் ஏற்படும் அபாயத்தைக் குறைப்பனவாகவோ அல்லது தடுப்பனவாகவோ உள்ளன. பொதுவான விலங்கு உணவுகள் புற்றுநோய் அபாயத்தைக் கூட்டுவனவாகவும், மரக்கறிகள், பழங்கள் புற்றுநோய் அபாயத்தைக் குறைப்பனவாகவும் உள்ளன.

***புற்றுநோயும் உணவின் பங்களிப்பும்***

புற்றுநோய் உருவாக்கத்தில் உணவின் பங்களிப்பு சுமார் 35 வீதம் ஆகும்.

***உணவும் புற்றுநோயும்***

புற்றுநோயை ஏற்படுத்தும் காரணிகள்

❖ உணவின் சில கூறுகளிலே நேரடியாகக் காணப்படுதல்.
அதிக அளவிலான கொழுப்பு
கூடுதலான இனிப்பு

❖ புறச்சூழலிலிருந்து உணவில் சேருதல்
விவசாய இரசாயனங்கள்
உறைப்பான உணவுகள்
உணவிற்சேர்க்கப்படும் மேலதிக பதார்த்தங்கள்.
உணவு தயாரிப்பின்போது சம்பவிக்கும் தீய விளைவுகள்
பதனிடப்பட்ட உணவுகள்.

❖ உணவின் சில கூறுகளில் இருந்து உடல் அனுசேபத் தாக்கங்களினால் உருவாகும் பதார்த்தங்கள்
உதாரணமாக நைத்ரோ சமைன்கள் உருவாதல்.

❖ புற்றுநோயைக் குறைக்கும் காரணிகள்
குறைவாயிருத்தல்.
நார்ப்பொருள்கள் குறைவாய் உட்கொள்ளல்.
**உணவுப்பதார்த்தங்களும் பாதிக்கப்படும் உடற்பகுதிகளும்............**

❖ புகையிலை - நுரையீரல், களம், சிறுநீரகம், சிறுநீர்ப்பை, கருப்பைக் கழுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ மதுபானம் - வாய்க்குழி, தொண்டை, களம், ஈரல்.
- ❖ அதிக கொழுப்புள்ள இறைச்சி (மாடு, பன்றி) - குடல், மார்பகம், சுக்கிலச் சுரப்பி (Prostat gland)
- ❖ சூடான காரமான உணவுகள் - வாய்க்குழி, தொண்டை, களம்.
- ❖ அதிகளவிலான உப்பு - இரப்பை
- ❖ மிகை நிரப்புப் பதார்த்தங்கள் - வாய்க்குழி, இரப்பை, சிறுநீர்ப்பை

கணிசமாக கட்டுப்பாடற்று சில உணவுகளை உண்பதால் புற்றுநோய் உருவாக்கத்தில் அதிகளவு பங்களிப்புச் செய்வதாகக் கருதப்படும் பிரதான உணவுகள்.

1. வெதுப்பிய, வாட்டிய செந்நிற இறைச்சிகள்
2. பொரியல் வகைகள்
3. பாற்பண்டங்கள்
4. சீனி தூவிய, உப்புச் சேர்ந்த கொறிக்கும் உணவுகள்
5. மதுபான வகைகள்
6. வர்த்தக ரீதியான வெண்ணெய் தயாரிப்புக்கள்
7. ஊறுகாய், அச்சாறு வகைகள்
8. கோப்பி
9. பதனிடப்பட்ட இறைச்சியினாலான தீன்பண்டங்கள்
10. கொழுப்பு அதிகமுள்ள உணவுகள்

**விவசாய இரசாயனங்களும் புற்றுநோயும்**

- ❖ பீடை கொல்லிகளின் மிகையான பாவனை
- ❖ கட்டுப்பாடற்ற செயற்கைப்பசளை உபயோகம்
- ❖ நிலத்தடி நீரில் இரசாயனங்களின் செறிவு அதிகரித்தல்
- ❖ தோற்றப் பொலிவுக்காகப் பச்சை இலை வகைகள், பழங்கள் மீது இரசாயனம் விசிறுதல்.
- ❖ பழங்கள், காய்கறிகளை நன்கு கழுவாது உட்கொள்ளல்.
- ❖ விவசாய இரசாயனங்களின் மீதிகள் உணவுப் பொருட்களில் அனுமதிக்கப்பட்ட அளவுக்குள் உள்ளனவா என அளவிடப்படாமை. மற்றும் இது தொடர்பான கடுமையான சட்டங்கள் பிரயோகிக்கப்படாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புற்றுநோய் ஏற்படும் அபாயத்தைக் குறைப்பதற்கான சில உணவுப் பழக்கவழக்கங்கள்

- ஒவ்வொரு சாப்பாட்டு வேளைகளிலும் வேறுபட்ட வகையான புதிய மரக்கறிகளையும், பல நிறமுள்ள பழங்களையும் அதிகளவிற்சேர்த்தல்.
- தானியங்களில் அதிகளவு நார்ச்சத்து இருப்பதால் அதனை இயன்றளவில் சாப்பாட்டிற்சேர்த்தல்.
- பழச்சாறுகள் உட்கொள்ளும்போது இயன்றளவில் 100 வீதமாகச் சாறாவே உட்கொள்ளல்.
- இரசாயனப் பதார்த்தங்கள் விசிறப்பட்ட மரக்கறிகள், பச்சை இலைகள் மற்றும் நிறப் பழவகைகள் நீரில் நன்றாக அலசிக் கழுவிய பின் பயன்படுத்தல்.
- சமையலறையில் பொரித்தலுக்காக முதல் நாள் பாவித்த எண்ணெயை அடுத்த நாள் பாவித்தலைத் தவிர்த்தல்.
- உணவின் மூலம் பெறும் சகதியின் அளவின் 10 வீதத்திலும் குறைவான அளவு மட்டும் கொழுப்புணவு மூலம் பெறல்.
- விலங்குணவு வகைகளைத் தவிர்த்தல்.
- பதனிடப்பட்ட உணவுகளைக் குறைந்தளவில் பயன்படுத்தல்.
- பொரிக்கப்பட்ட மரக்கறி வகைகளை இயன்றளவில் குறைத்தல்.
- சிறிய வகை மீன்களை உணவில் இயன்றளவில் சேர்த்தல்.
- பூஞ்சணம் பிடித்த ஒடியல், நிலக்கடலை மற்றும் பழுதடைந்த தயிர் போன்ற உணவுகளைத் தவிர்த்தல்.
- மிகச் சூடான உணவுகள், பானங்கள் என்பன அதிகம் உள்ளெடுத்தலைத் தவிர்த்தல்.

சீரான வாழ்க்கைமுறையும், முன்னேற்றகரமான நடத்தையியல் மாற்றங்களும் புற்றுநோய் தோன்றுவதைத் தடுப்பதில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன.

- உடற்பருமனைக் கட்டுப்பாடாகப் பேணல்.
- அளவான- ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை உபயோகித்தலைத் தவிர்த்தல்.
- புகைத்தலை நிறுத்துதல், மதுபாவனையிலிருந்து படிப்படியாக விடுபடுதல்.
- நாளாந்தச் செயற்பாடுகளிலேயே உடலைக் கட்டுக் கோப்பாய் பேணவல்ல உடற் பயற்சிகளை மேற்கொள்ளல்.
- உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்திருத்தல்.

## புற்றுநோய் சிகிச்சை வசதிகள்

வடமாகாணத்தில் முதன் முதலாக புற்றுநோய் சிகிச்சை வசதிகள் 14.12.2004 இல் யாழ். போதனா வைத்தியசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஏழு வருடங்கள் கடந்த நிலையில், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஆண், பெண் பாலருக்கு தனித்தனியே பலவசதிகள் கொண்ட விடுதிகள், மருத்துவ ரீதியிலான சிகிச்சைக்காக அமைக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அமைந்துள்ள G.G. பொன்னம்பலம் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் கதிர்வீச்சு சிகிச்சை வழங்கப்படுகின்றது. புற்றுநோயால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தூரபிரதேசத்தில் இருந்து வரும் நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெற புற்றுநோயாளர் காப்பகம் மருதனார் மடத்தில் அமைந்துள்ளது. இதனை CANE (UK) தொண்டு நிறுவனம் பராமரித்து வருகின்றது.

இவை தவிர, தீவிர புற்றுநோய் சிகிச்சை முடிவுற்ற நிலையில் உள்ள நோயாளர்களைப் பார்வையிடுவதற்காக பல கிளினிக் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**யாழ் மாவட்டத்தில்:**

- யாழ். போதனாவைத்தியசாலை
  பிரதி வெள்ளி, சனி - காலை
- தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை
  பிரதி திங்கள், வியாழன் - காலை
- பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை
  பிரதி முதலாம் புதன் - காலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை
  பிரதி இரண்டாம் புதன் - காலை
- சங்கானை பிரதேச வைத்தியசாலை
  பிரதி நான்காம் புதன் - காலை
- காரைநகர் பிரதேச வைத்தியசாலை
  பிரதி நான்காம் புதன் - மாலை

**வவுனியா மாவட்டத்தில்:**

- வவுனியா பொது வைத்தியசாலை
  பிரதி இரண்டாம் செவ்வாய் - காலை

**கிளிநொச்சி மாவட்டத்தில்:**

- கிளிநொச்சி பொது வைத்தியசாலை
  பிரதி மூன்றாம் செவ்வாய் - காலை

புற்றுநோய் விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்காக புற்றுநோய் சம்பந்தமான பதாதைகள் மற்றும் ''நண்டு'' என்னும் இறுவெட்டு என்பன வெளியிடப்பட்டுள்ளது. மேலும் விழிப்புணர்வு நிகழ்வுகளை ஏற்படுத்துவதற்காக, புற்றுநோய் சம்பந்தமான கல்வி வழங்கல் மற்றும் நோயாளர்களை ஆற்றுப்படுத்தல் மையமானது HNB நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடபகுதியில் புற்றுநோய் சிகிச்சைக்கான ஒருங்கிணைந்த சிகிச்சை நிலையம் அமைப்பதற்காக, பாதை (Trail) என்னும் மனித நடை பயணமானது தெய்வேந்திர முனையில் இருந்து பருத்தித்துறை வரை மேற்கொள்ளப்பட்டு பெருநிதி சேகரிக்கப்பட்டது. இந்த நிலையத்தை அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் தெல்லிப்பளையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எல்லாம் இனிதே நிறைவேற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

"***இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க***"

**Dr. N. ஜெயகுமார் M.B.B,S M,D**
**புற்றுநோய் சிகிச்சை நிபுணர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

## எமது குடும்ப குல விளக்கு

நோயுற்ற செய்தி கேட்டு வைத்திய சேவைகளை வழங்கியவர்களுக்கும், சகல வழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும், இறை ஆசி வேண்டி பிரார்த்தனைகளில் ஈடுபட்டவர்களுக்கும், ஆறுதல்கள், ஆலோசனைகள் வழங்கி ஆதரித்தவர்களுக்கும், இந்தியா C.M.C மருத்துவ மனைக்குச் செல்ல உதவியவர்களுக்கும், இணையத்தளங்கள் மூலம் உதவிகளை வேண்டி பிரசுரங்களை வழங்கியவர்களுக்கும், கனடா காரை கலாசார மன்றத்தினருக்கும், லங்கா சிறி இணையத்தளத்தினருக்கும், இலண்டன், பிரான்ஸ், சுவிஸ் காரை கலாசார மன்றத்தினர்களுக்கும் தனிப்பட்ட முறையில் செய்திகேட்டு ஓடோடி வந்து உதவியவர்களுக்கும், அவரது இறுதிச் சடங்கில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும், அவரது மரணச் செய்தியை பிரசுரங்கள் மூலம் வெளிப்படுத்திய இணையத் தளங்களுக்கும், பத்திரிகைகளுக்கும், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையினருக்கும், அவரது அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பெனர்களை கட்டி ஆதங்கங்களை வெளிப்படுத்தியவர்களுக்கும், வீட்டில் நாங்கள் இல்லாதபோதும் வீட்டில் விளக்கேற்றி அவரது நினைவு அஞ்சலியை செய்து உதவியவர்களுக்கும், அவரது இறுதி அஞ்சலி நிகழ்வுகளுக்காக அவரது திருவுருப்படத்தை அமைத்துத் தந்துதவிய ஆசிரியர் தினேக்ஷ்குமார் அவர்களுக்கும், உதயநகர் கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினருக்கும், மரணத்தின் பின்னரும் அவரது இலட்சியங்களுக்காக சகோதரிகளின் எதிர்கால நன்மை கருதி நிதியுதவிகள், உதவிகள், ஆறுதல்கள் புரிவோருக்கும், அவரது அந்தியேட்டி, வீட்டுகிருத்தியங்களில் கலந்து ஆறுதல் அளிப்பவர்களுக்கும், இம்மலரை செவ்வனே தொகுத்து உதவியவர்களுக்கும், அச்சேற்றி உதவியவர்களுக்கும் எம் இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி
இங்ஙனம்,
கனகலிங்கம் குடும்பத்தினர்,
இல-337, உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

எமது வலயக் கல்வி அலுவலக
முகாமைத்துவ உதவியாளர்

*அமரர்*
## கனகலிங்கம் சுதர்சன்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 | 17 |
| 03 | 09 |
| 1986 | 2012 |

மல்லிகைச்சிரிப்பால் – எம்
இதயத்தை நிறைத்தவனே!
பிஞ்சின் சிதறலாய்
பூக்களின் உதிர்வாய் – உன்
வைர நெஞ்சம் கரைந்தனவோ!
ஆறுதல் சொல்லி ஆறிட
ஆறிலா? அறுபதிலா? எம்மை விட்டுப் பிரிந்தாய்?
சித்திர புத்திரன் எழுத்தினிற்கு
உன் பிரிவு கண்டு எம் மனம் ஆறிடுமோ? – உன்
புன்னகை சிந்தி ஒருமுறை சொல்லடா!

அன்னாரின் பிரிவினால் ஆறாத்துயருற்றிருக்கும் பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*வலயக் கல்விப் பணிப்பாளரும்,*
*உத்தியோகத்தர்களும்,*
*வலயக்கல்வி அலுவலகம்,*
*கிளிநொச்சி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவலைகளுடன்

மண்ணில் 24 03 1986



விண்ணில் 17 09 2012

அமரர்

# கனகலிங்கம் சுதர்சன்

(எமது தோழி சுதர்சினியின் சகோதரன்)

நிஜமா........ இது நிஜமா..
சற்று நொடிகளுக்கு முன்
எம் செவிகளில் அலை மோதியதே...!
அந்தச் செய்தி நிஜமா.....??
காற்றே உன்னிடம்
பிச்சையாக கையேந்தி நிற்கின்றோம்...
இல்லை என்று ஒரு வார்த்தை சொல்லி விடு..
ஓ காற்றே விம்மி வெதும்பி
துடிக்கும் எம் இதயங்களின்
துடிப்பை நிறுத்தி விடாதே...!!!
பாசத்துக்கு இலக்கணமான சகோதரனே சுதா...
சாதிக்கப் பிறந்தவன் நீ, கொடிய நோய் உன் சாவை
அணைத்தது ஏனோ..
உனக்காக நாம் இங்கு
காத்திருந்த காலை வேளையிலே
அலை வழியே அதிரடியாய் வந்தது
உன் பிரிவுச் செய்தி
உன் பிரிவை எம் இதயம் ஏற்க மறுக்கின்றது. ..
மறுபடியும் வருவாயோ..! உன் பூமுகம் காண
இங்கு......... உனக்காக காத்திருக்கும் உன்
சகோதரர்கள்.

**இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

VTA- Kilinochchi, NCICT கணினி மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் சமர்ப்பணம்



பிறப்பு
24
03
1986

இறப்பு
17
09
2012

காரைநகரை பிறப்பிடமாகவும் இல-337, உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர்

## கனகலிங்கம் சுதர்சன்

மரணத்தை மரணிக்க வைக்க முடியாது.
முடியுமென்றால் வேதனை தெரியும்
மரணத்துக்கு,
சொந்த பந்தங்கள் இருந்திருந்தால்
வேதனை தெரிந்திருக்கும் மரணத்துக்கு,
என்றும் எம்மோடு எம்
உறவின் ஜோதியாய் நிலைத்திருப்பாய்
நீ தந்த பாசங்கள் நெஞ்சத்தில்
எந்த நாளும் நிலை கொண்டு இருந்திடவே
உங்கள் தூய நினைவுகளை எங்கள்
நெஞ்சத்தில் பதித்து விட்டாய்!!!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் வாடும்
டிங்காதரன் (மாமா)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவழி

*கந்தையா + அபிராமி*
- *சுப்பிரமணியம் + *சிவபாக்கியம்
  - மகாலிங்கம் + மகாலட்சுமி
  - கனகலிங்கம்
  - தேவலிங்கம் + வசந்தி
- *வேலுப்பிள்ளை + *சரசம்மா

*அருணாசலம் + சுந்தரம்மா*
- *தில்லையம்பலம் + சௌந்தரம்*
  - நல்லம்மா + கிருஸ்ணமூர்த்தி
  - *சுப்பிரமணியம் + யசோதா
  - கோமளம் + கனகசுந்தரம்
  - புவனேஸ்வரி
  - *டிங்காதரன் + புஸ்பராணி

கனகலிங்கம் + புவனேஸ்வரி
- *சுதர்சன்
- சுஜீவன் (காணாமல் போனவர்)
- சுதர்சினி
- சுபாசினி
- சுகந்தினி
- சுஜீவினி

* அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.



**இந்த மாற்றம் உலக நியதியும்**
**எனது படைப்பின் சாராம்சமாகும்**
**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

வேழன் பதிப்பகம் கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org